# ஜென்–z தி.மு.க.வினரைக் குறி வைத்து சோதனைகள்; கைதுகள்

# ஆளுங்கட்சியின் மக்கள் விரோதப்போக்கை அம்பலப்படுத்துவோம்!

## தஞ்சை மாவட்டக் கழக முன்னாள் இளைஞர் அணி நிர்வாகி ராஜேந்திரன் இல்ல திருமண விழாவில் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

***தஞ்சை, ஜூலை 1 -***

***தஞ்சை மாவட்ட இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் டி.இராஜேந்திரன் அவர்களின் மகன் டி.ஆர்.முத்து - பிரியதர்சினி இணையரின் திருமணத்தை, திருவோணம் அருகே சுக்கிரன்விடுதியில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைத்து வாழ்த்துரை வழங்கினார்.***

***கழக இளைஞர் அணிச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:***

தஞ்சை மாவட்டத்தின் இளைஞர் அணி துணை அமைப்பாளராகச் சிறப்பாகப் பணியாற்றிய அண்ணன் ராஜேந்திரன் அவர்களின் அன்பு மகன் தம்பி முத்து, சகோதரி பிரியதர்ஷினி இணையருடைய திருமணத்தை உங்களின் முன்னிலையில் நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

திருவோணம் வடக்கு ஒன்றியக் கழகம் சார்பாக வருகை தந்திருக்கக்கூடிய நிர்வாகிகள் எனக்குக் காலையிலிருந்து மிகச் சிறப்பான ஏற்பாடுகளை, வரவேற்பை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு முதலில் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கிறது. ஆனால், இங்கு இருக்கக்கூடிய உடன்பிறப்புகள் உங்களின் எழுச்சியை, உற்சாகத்தைப் பார்க்கும்பொழுது, ஆளுங்கட்சியாக இருக்கும்போது எவ்வளவு எழுச்சியாக இருந்தோமோ, எதிர்க்கட்சியாக இருக்கும்போது அதைவிட இன்னும் வேகமாக நீங்கள் எல்லாம் இருக்கிறீர்கள்.

அண்ணன் ராஜேந்திரன் அவர்களைப் பற்றி உங்களிடத்தில் நான் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. உங்கள் அத்தனை பேருக்கும் தெரிந்தவர்தான். அவரைப் பற்றி ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

1979-ஆம் ஆண்டே தன்னைக் கழகத்தோடு இணைத்துக்கொண்டவர்தான் அண்ணன் ராஜேந்திரன் அவர்கள். இந்த திருமண நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் எனக்கென்ன கூடுதல் பெருமை என்றால், அண்ணன் ராஜேந்திரன் அவர்கள் இளைஞர் அணியிலிருந்து வளர்த்தெடுக்கப்பட்டவர், ஆளாக்கப்பட்டவர். எனவே, எதிர்க்கட்சித் தலைவராக மட்டுமல்ல கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளராக இந்த திருமணத்தை நடத்தி வைப்பதில் நான் மிகுந்த பெருமையடைகிறேன்.

அண்ணன் ராஜேந்திரன் அவர்கள் ஒன்றிய இளைஞர் அணி பொறுப்பாளராக, பிறகு மாவட்ட இளைஞர் அணியின் துணை அமைப்பாளர் என்று பல்வேறு பொறுப்புகளில் சிறப்பாகப் பணியாற்றியவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டத்திலும் பங்கேற்றுச் சிறை சென்றிருக்கக் கூடியவர்தான் அண்ணன் ராஜேந்திரன் அவர்கள்.

1990-ஆம் ஆண்டு நம் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில்தான் அண்ணன் ராஜேந்திரன் அவர்களின் திருமணம் நடந்தது. இன்றைக்கு அண்ணனுடைய மகன் திருமணத்தை நான் நடத்தி வைக்கின்ற வாய்ப்பை பெற்றிருக்கிறேன்.

**சோஃபா மாடல் கொடுமைகள்**

இன்றைக்கு இந்த புதிய ஆட்சி, சோஃபா மாடல் ஆட்சி அமைந்த பிறகு நாடு என்ன நிலைமையில் இருக்கிறது என்று உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும். அனைவரும் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். குறிப்பாக, சட்டமன்ற நிகழ்வுகளை இன்றைக்கு அனைவரும் தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆளுங்கட்சி வரிசையில் இருக்கக்கூடியவர்கள் அடிக்கின்ற கூத்துகளை நீங்கள் தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். நானும் இங்கு இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களும் நேரலையில், நேரிலேயே பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த கொடுமைகள் எல்லாம் நேரில் பார்க்கின்ற வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்திருக்கிறது.

'தேசிய கீதம்' இரண்டு முறை பாடுகிறீர்களே, தமிழ்த்தாய் வாழ்த்தை மட்டும் ஏன் ஒரு முறைதான் பாடுகிறீர்கள் என்று கேட்டால் அதற்கு முதலமைச்சரிடமிருந்து பதில் கிடையாது. இதற்கு முன்பு இருந்த முதலமைச்சர்கள் எல்லாம் அவைக்குள் வந்த உடனே, எதிரில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் பார்த்து வணக்கம் வைப்பார்கள். ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய முதலமைச்சர் அவைக்குள் வந்த உடனே, எந்த ஆங்கிளில் எத்தனை கேமரா இருக்கிறது என்பதைப் பார்ப்பதுதான் முதல் வேலையாக வைத்திருக்கிறார். அதனால், எங்களுக்கெல்லாம் சந்தேகம் வந்துவிடுகிறது. அந்த அவைக்குள் நாங்கள் நுழைந்த உடனே, இது என்ன சட்டமன்றமா, இல்லை சினிமா திரையரங்கமா, இல்லை ஷூட்டிங் ஸ்பாட்டா என்று கேட்கும் அளவுக்கு இன்றைக்கு சட்டமன்றத்தை ஆளுங்கட்சியினர் மாற்றி வைத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு முதலமைச்சர் அவர்களும் தொடர்ந்து தன்னுடைய நடிப்புத் திறனை ஒவ்வொரு நாளும் காட்டிக் கொண்டு இருக்கிறார்.

**முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்தான் ஆள்கிறார்!**

அதுமட்டுமல்ல, அவைக்குள் கதை சொல்கிறேன்



என்று எதை எதையோ உளறிக்கொண்டு இருக்கிறார். நம் தலைவரை அவர் தேடிக்கொண்டு இருக்கிறாராம். நம் தலைவர் என்றைக்குமே தேடிக் கண்டுபிடிக்கிற இடத்தில் இருந்தவர் இல்லை. எப்பொழுதுமே மக்களோடு மக்களாக இருந்தவர்தான், இன்றைக்கும் இருப்பவர்தான் நம் தலைவர். மக்களின் இதயத்தில் பல்வேறு திட்டங்கள் மூலம் இருக்கிறார். தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்தாலும் தில்லாக, தெம்பாகப் போய் தொகுதி மக்களைச் சந்தித்து நன்றி சொன்னவர் நம் தலைவர் அவர்கள் என்பதை இப்போது இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்கள் மறந்துவிட்டார். ஆனால், பெரம்பூர் தொகுதியில் இவர் வெற்றி பெற்றாரே, இதுவரைக்கும் ஒரு முறையாவது சென்று மக்களுக்கு நன்றி சொன்னாரா என்று பார்த்தீர்கள் என்றால், நிச்சயம் கிடையாது.

மிசா காலத்தில் காவல்துறை தேடியபோது, தானாகச் சென்று கைதானவர் நம் தலைவர் அவர்கள். நம் தலைவருடைய பெயரை எங்கும் தேட வேண்டிய அவசியம் இல்லை. இன்றைக்குக் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், இப்படிப் பல்வேறு திட்டங்களில் நம் தலைவர் அவர்கள் இருக்கிறார். இந்தத் திட்டங்களைத் தவிர்க்க முடியாமல், நிறுத்த முடியாமல் இந்த சோஃபா மாடல் அரசு இன்றைக்குத் தவித்துக்கொண்டு, திணறிக்கொண்டு இருக்கிறார்கள். இந்தத் திட்டங்களில் கை வைக்க வேண்டும் என்று நினைத்தபோது இந்த அரசுக்கு நிச்சயம் ஒரு பயம் வந்திருக்கும். அந்தப் பயம் இருக்கிற வரைக்கும் தமிழ்நாட்டை ஆண்டு கொண்டிருப்பது நம் தலைவர்தான், திரு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்தான். ஆகவே, 'குரளி வித்தை' காட்டுகிற இந்த வேலையை நிறுத்தி வைத்துவிட்டு, முதலமைச்சர் அவர்களும் இந்த அரசும் ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**இதுதான் ஊழல் லட்சணமா?**

இவர்களின் ஆட்சியில் இன்றைக்கு மக்கள் மின்சாரம் எங்கே என்று தேடிக்கொண்டு இருக்கிறார்கள். நன்றாக இருந்த சட்டம் ஒழுங்கு எங்கே போயிற்று என்று மக்கள் இன்றைக்குத் தேடிக் கொண்டு இருக்கிறார்கள். கடந்த ஐந்து வருடங்களாக நம் தலைவர் ஆட்சியில் சரியாக ஜூன் 12 அன்று மேட்டூர் அணையை நம் தலைவர் அவர்கள் திறந்து விட்டார்கள். ஆனால், இந்த ஆட்சியில் அது நடந்திருக்கிறதா என்று பார்த்தீர்கள் என்றால், இல்லை. எனவே, தண்ணீர் எங்கே என்று இன்றைக்கு மக்கள் தேடிக்கொண்டு இருக்கிறார்கள். மொத்தத்தில் தமிழ்நாட்டில் ஆட்சி என்று ஒன்று நடந்தது அல்லவா, அது இப்போது எங்கே என்று இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்கள் தேட ஆரம்பித்துள்ளார்கள். அருகே உள்ள புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து ஒருவர் ஆளுங்கட்சியில் சேரப்போவதாகத் தினமும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இவ்வளவு நாள் ஊழல் சக்தியாக இருந்த அவர், இனிமேல் தூய சக்தி ஆகிவிடுவார். இதுதான் இந்த அரசினுடைய ஊழல் ஒழிப்பு லட்சணம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்றைக்குப் பார்த்தீர்கள் என்றால், தொடர்ந்து தி.மு.க.வினரைக் குறிவைத்து, அதுவும் ஜென்சி தி.மு.க.வினரைக் குறி வைத்துப் பல சோதனைகள் நடத்துகிறார்கள், கைது நடவடிக்கையில் இறங்கி இருக்கிறார்கள். இதையெல்லாம் முறியடிக்க வேண்டியது நம் கடமை. இந்த ஆட்சியாளருடைய அநியாயங்களை உடன்பிறப்புகளாக நாம் ஒன்றாக இருந்து தோலுரித்துக் காட்ட வேண்டும். இந்த அரசினுடைய மக்கள் விரோத செயல்பாடுகளைத் தொடர்ந்து நாம் அம்பலப்படுத்த வேண்டும். அதை மனதில் வைத்துக் கொண்டு கழக உடன்பிறப்புகள் நீங்கள் அத்தனை பேரும் தீவிரமாகக் களமாட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மணமக்கள் இரண்டு பேருக்கும் என்னுடைய அறிவுரை என்னவென்றால், இரண்டு பேரும் விட்டுக்கொடுத்து, அதே நேரத்தில் சுயமரியாதையோடு சிறந்த நண்பர்களாக இருவரும் உங்களின் திருமண வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, உங்களுக்குப் பிறக்க இருக்கக்கூடிய குழந்தை அது ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் ஒரு அழகான தமிழ்ப் பெயரை நீங்கள் சூட்ட வேண்டும் என்று உங்கள் அத்தனை பேர் சார்பாகக் கேட்டுக்கொண்டு, மணமக்களுக்கு மீண்டும் உங்கள் அத்தனை பேர் சார்பாக என்னுடைய வாழ்த்துகளைக் கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

**பங்கேற்றவர்கள்**

மாவட்டக் கழகச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான துரை சந்திரசேகரன், முன்னாள் அமைச்சர்கள் ரகுபதி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பழனிமாணிக்கம், கோவி.செழியன், மெய்யநாதன், வைத்தியலிங்கம், மாவட்டக் கழகச் செயலாளர் செல்லப்பாண்டியன், பழனிவேல், நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி, சட்டமன்ற உறுப்பினர் அண்ணாதுரை, மருத்துவர் முத்துராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ராமச்சந்திரன், நீலமேகம், ரெங்கசாமி, மகேஷ் கிருஷ்ணசாமி, மாநகர செயலாளர் தமிழமுகன், சன் ராமநாதன், ராஜேஷ், துணை மேயர்கள் மருத்துவர் அஞ்சுகம் பூபதி, லியாகத் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செல்வம், கீரை தமிழ்ராஜா, கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் சந்திரசேகர், சுப.தமிழழகன், சுப.சரவணன், கருப்பையா, கனகவல்லி, ஒன்றிய கழக செயலாளர்கள் நடுவூர் செல்வராஜ், முருகையன், செல்ல ரமேஷ்குமார், கார்த்திகேயன், முத்துக் கிருஷ்ணன், பேரூர் கழக செயலாளர் முருகேசன், திராவிடக் கதிரவன், துரை ஜெயக்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் சண்முகம், முகில்வேந்தன், மாநகர அமைப்பாளர் வாசிம் ராஜா, துணை அமைப்பாளர்கள் செந்தமிழ்ச்செல்வன், சுரேஷ், வெங்கடேசன், கார்த்திக், உதயநிதி, ஹரிதரன், மருத்துவர் சந்திரசேகரன், வீரமணி, சிவக்குமார், அன்சாரி பாஷித், மாநகர துணை அமைப்பாளர் மதிபாலன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் பிரபு, செல்லத்துரை, அழகிரி, ஐயப்பன், பேரூர் அமைப்பாளர் ஃபரூக், உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.

### அமைச்சரவையில் இருக்கும் போதை ஆசாமிகளுக்கு அறிவுரை கூற முடியாத

# முதலமைச்சர், போதை ஒழிப்புக்கு ஓட்டப்பந்தயம் நடத்தி என்ன பயன்?

## போராட்டம் தொடரும் என முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆவேசப் பேட்டி!







சென்னை, ஜூலை 1 -

கழக மாணவரணி சார்பில் தமிழக வெற்றி கழக அமைச்சர் சரத்குமார் பொதுவெளியில் போதைப் பொருள் உபயோகப்படுத்தியதை கண்டித்து ஒருங்கிணைந்த சென்னை. மாவட்ட மாணவர் அணி சார்பில் சென்னை , எழும்பூர், ராஜரத்தினம் விளையாட்டு மைதானம் அருகில் 29.6.2026 திங்கட்கிழமை காலை 9.30 மணி அளவில் நடைபெறவிருந்த ஆர்பாட்டம் முறையாக அனுமதி கேட்ட போதும் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் 100க்கும் மேற்பட்ட கழகத் தோழர்களை அதிகாலையில் வலுக்கட்டாயமாக கைது செய்ததால் காலை 10.00 மணியளவில் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ அவர்கள் தலைமையில் மேயர் பிரியா ராஜன், கழக மாணவர் அணி செயலாளர் ஈரோடு வீரமணி, கழக மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் நா. எழிலன், தமிழன் பிரசன்னா மற்றும் 2500க்கும் மேற்பட்டோர் புரசைவாக்கம் டவுட்டன் பகுதியில் ஊர்வலமாக சென்று சாலையை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**234 பெண்கள் உள்பட 690 பேர் கைது!**

இதில் 690 பேரை போலீசார் கைது செய்தனர். அதில் 234 பெண்கள் கைதாயினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பி.கே.மூர்த்தி, கே.எஸ்.எம்.நாதன், கே. சந்துரு, சி.மகேஷ் குமார், பகுதி செயலாளர்கள் ஐசிஎப் வ.முரளிதரன், எ.நாகராஜன், செ.தமிழ் வேந்தன், எம்.சாமிகண்ணு, வே.வாசு, கோபி கூ.பீ.ஜெயின், ஜோசப் சாமுவேல், டி.எஸ்.பி. ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், எஸ்.ராஜசேகர், எஸ். முரளி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட / பகுதி / வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்துகொண்டு ஆர்ப்பரித்தனர்.

இதில்சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அவர்கள் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

ஸ்டேடியத்தில் அமர்ந்து கிரிக்கெட் போட்டியைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, போதை மாத்திரையைப் பொடியாக்கி அதனை நுகரும் பணிகளில் அமைச்சர் ஈடுபட்டிருந்ததை, தமிழ்நாட்டின் உள்ள அனைத்து ஊடகங்களும், அதேபோன்று யூடியூப் போன்ற தனியார் இணையச் சேனல்களும் என்று ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் வெளியிட்டிருந்த வேளையில், அதுகுறித்து அரசின் கவனத்தை ஈர்க்கவும், சம்பந்தப்பட்ட அமைச்சர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவும், திராவிட முன்னேற்றக் கழக மாணவரணி சார்பில் போராட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது.

**போராட்டத்திற்கு முறையாக அனுமதி கேட்டோம்!**

இன்றைக்கு அந்தப் போராட்டம், சென்னை மாவட்டத்தில் ஒரே இடத்தில் ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில் போராடுவதற்கு – ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தோம். அது அனுமதிக்கப்பட்ட இடம். அது குறித்து முறையாக நேற்றைக்கே மனு அளித்திருந்தோம்.

நாங்கள் முதலில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் அனுமதி கேட்டிருந்தோம். ஆனால், அங்கு கம்யூனிஸ்ட் பேரியக்கத்தின் ஆர்ப்பாட்டம் இருப்பதால், “நீங்கள் ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் நடத்திக் கொள்கிறீர்களா?” என்று கேட்டார்கள். நாங்களும், ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் நடத்திக் கொள்கிறோம் என்று ஒப்புதல் அளித்தோம்.

இன்று காலையில் அது சம்பந்தமான மேடை அமைக்கும் பணிகள் தொடங்குகிறபோது, இருபத்தைந்திற்கும் மேற்பட்ட காவல்துறையினர், குறிப்பாக, எழும்பூர் காவல்துறை ஆணையாளர் ராஜேந்திரன், அந்தப் பகுதியின் காவல்துறை உதவி ஆணையாளர் ஜெகதீஷ், ஒரு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், வழக்கறிஞர் என்று கூடப் பாராமல் கழுத்தில் கையை வைத்து வாகனத்தில் ஏற்றுகின்றார்கள்.

**திராவிட மாடல் நாயகன் வழியில் எங்கள் போராட்டம் தொடரும்!**

அந்த மேடை அமைப்பதற்கும், ஒலி–ஒளி அமைப்பதற்கும் கொண்டு வரப்பட்டிருந்த வாகனங்களைப் பறிமுதல் செய்து கொண்டு சென்றதுடன், மேடை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களையும் கைது செய்திருக்கின்றார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ன தீவிரவாத இயக்கத்திற்கு ஆதரவாகவா போராட்டக் களத்தில் இருக்கிறது? நியாயமான கோரிக்கைகளை வற்புறுத்தவும், கேட்காத காதினராக இருக்கும் இந்த அரசாங்கத்தின் செவிகளுக்கு சென்று சேர்வதற்கும், கவனத்தை ஈர்ப்பதற்காகவும்தான் இந்த ஆர்ப்பாட்டம்! இது வெறும் ‘டிரெய்லர்’தான்.

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அவர்களின் கட்டளையை ஏற்று, ஒரு இடத்தில் நடத்த இருந்த ஆர்ப்பாட்டத்தை, சென்னையில் மூன்று இடங்களில் மாற்றி, கைது நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பது எங்களது இயக்கத்திற்கு மேலும் உத்வேகத்தை அளிக்கும். அடிக்க அடிக்க எழுகின்ற பந்தாகவும், அரைக்க அரைக்க மணக்கின்ற சந்தனமாகவும், தீட்டத் தீட்ட ஜொலிக்கின்ற வைரமாகவும் திகழ்பவர் திராவிட மாடல் ஆட்சியின் நாயகன். நெருக்கடியையே சிரித்து முகத்துடன் 24 வயதில் சந்தித்தவர். அவருடைய படை, சிறைக்கு அஞ்சாது. கொடுஞ்சிறைச்சாலை என்றாலும் சரி, அல்லது காவல்துறையின் தடியடிப் பிரயோகம் என்றாலும் சரி, சிரித்த முகத்தோடு சிறைச்செல்ல தயார், தயார், தயார்!

**இந்த அரசுதான் எங்களை போராட்டத்திற்கு தள்ளியுள்ளது!**

தமிழ்நாடு அரசு எங்களை எப்படி அணுகுகிறதோ, அதே போன்று தமிழ்நாடு அரசிடம் எங்களுடைய அணுகுமுறை இருக்கும் என்பதைத் தெரிவித்து, இந்தப் போராட்டம் தொடரும், தொடரும், தொடரும்!

**செய்தியாளர்:-** காவல்துறை, ஐந்து முழு வேலை நாட்களுக்கு முன்பாக போராட்டத்திற்கு உண்டான அனுமதி கேட்க வேண்டும். அவ்வாறு கேட்காததனால்தான் நாங்கள் அனுமதி கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள்?

**பி.கே.சேகர்பாபு:-** நான் 45 ஆண்டு காலம் அரசியல் இயக்கத்தில் பயணிப்பவன். இதுபோன்ற போராட்டங்களில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என இரண்டிலும் இருந்தவன். காவல்துறை நினைத்தால், ஒருநாள் அன்றே கூட அனுமதி கேட்டால் கொடுத்து நடைபெற்ற போராட்டங்கள் ஏராளமாக உள்ளன. எனவே மறுக்கிறோம் என்றால், முறையாக எங்களுக்குத் தகவல் தெரிவித்திருந்தால், நாங்கள் நீதிமன்றத்தை நாடி இருப்போம் அல்லது நீங்கள் சொல்வது போன்று சட்டத்திற்கு உட்பட்டு கூட நாங்கள் வந்திருப்போம்.

எங்கள் அனுமதி மீது எந்தவிதமான தகவலையும் தெரிவிக்காமல், காலையிலே மேடை அமைப்பவர்களைக் நீங்கள் கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டதால்தான், தற்போது இங்கு நாங்கள் சாலை மறியல் செய்ய வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். போராட்டக் களத்திற்கு தி.மு.கவாகச் செல்லவில்லை; இந்த அரசுதான் எங்களைப் போராட்டக் களத்திற்கு தள்ளியிருக்கிறது.

**மக்களுக்கான போராட்டம் இது!**

**செய்தியாளர்:-** தி.மு.க. எப்போதும் மக்கள் பிரச்சினைகளுக்காக போராடுகிற இயக்கம். மக்களுக்கு பாதிப்பில்லாமல் இருக்கும். ஆனால் இன்றைக்கு, சாலை மறியலினால் ஒரு மணி நேரத்திற்கு மேலாக இந்தச் சாலையில் போக்குவரத்து நெரிசல் இருக்கிறது என்பது குறித்து?

**பி.கே.சேகர்பாபு:-** இதுவும் மக்களுக்காகத்தான் நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறோம். முதலமைச்சர் வரும்போது சாலையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை விடவும், கரூரில் ஏற்பட்ட சம்பவத்தில் 41 உயிர்கள் பலியானதை விடவும், இது ஒன்றும் பெரியதல்ல. தமிழ்நாட்டின் மனித வளத்தைக் காக்கவும், தமிழ்நாட்டின் போதை கலாச்சாரத்தை ஒழிக்கவும் தான் நாங்கள் போராடுகிறோம்.

தமிழ்நாடு அமைச்சரவையில் இருக்கும் ஒரு அமைச்சரே போதை பழக்கத்திற்கு ஆளாகியுள்ளார். கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு ‘மாரத்தான்’ ஓடியதில் என்ன பயன்? தன் அமைச்சரவையில் இருக்கும் போதை ஆசாமிகளுக்கே அறிவுரை சொல்ல இயலாத முதலமைச்சர், போதை ஒழிப்பிற்காக ஓட்டப்பந்தயம் நடத்தி என்ன பலன்? அதற்காகத்தான் மக்களிடையே விழிப்புணர்வுக்கு இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது.

**அச்சுறுத்தலுக்கு அஞ்ச மாட்டோம்!**

இதுவும் மக்களுக்குத் தொந்தரவு கொடுப்பதற்காக அல்ல. நாங்கள் கேட்ட இடத்தில் முறையாக அனுமதித்திருந்தால், முழக்கங்களை எழுப்பிவிட்டு கலைந்து சென்றிருப்போம்.

திராவிட முன்னேற்றக் கழகம் காட்டாற்று வெள்ளம். பல தடைகளைத் கடந்து வரும் இயக்கம். இது நீரோடை, தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்கும்.

அச்சுறுத்தல்களாலோ, மிரட்டல்களாலோ அடிபணிய வைக்க முடியாது என்பதற்கு, இது ஒரு ‘டிரெய்லராகக்’ இன்றைக்கு காட்டியிருக்கிறோம்.

**அமைச்சர் பதவி விலக வேண்டும்!**

**செய்தியாளர்:-** அந்த அமைச்சர் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

**பி.கே.சேகர்பாபு:-** நிச்சயமாக அவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும். அது ஒரு பாடமாக இருக்க வேண்டும். அவரை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். அவர் ‘கொக்கைன்’ உபயோகப் பயன்படுத்தியிருக்கிறாரா என்று ஆய்வறிக்கை கேட்க வேண்டும். இந்தப் பாடம் தமிழ்நாட்டில் இருக்கும் அரசியல்வாதிகளுக்கும், மக்களுக்கும் ஒரு பாடமாக அமையும் என்பதால் தான் இதை வற்புறுத்துகிறோம்.

**நேற்று முன்தினம் மாலை விடுதலை ஆன பின் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் கூறியதாவது : -**

புதிதாக ஏற்பட்டுள்ள தற்குறி அரசாங்கத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் நிலையும் அறியாமல், தேர்தலில் அவசர கோலத்தில் சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பலனாக இன்றைக்கு ஒரு அமைச்சரின் பின்னணியைப் பார்த்தால் ஒரு குடும்பத்தையே கையில் உருட்டுக்கட்டை வைத்து அடித்து நொறுக்குகின்ற அமைச்சர்,

ஒரு அமைச்சர் பார்த்தால் குழந்தையின் காலை பிடித்து பாலியல் சீண்டல் செய்யக்கூடிய அமைச்சர்,

ஒரு அமைச்சரைப் பார்த்தால் வாயைத் திறந்தாலே அண்டப் புளுகு, ஆகாசப் புளுகு என்பார்கள். ஆனால் தார்ப்பாயில் வடிகட்டி புளுகிக் கொண்டு இருக்கின்ற அமைச்சர் மார்டின் மாஃபியா.

அடிக்கின்ற மழையில் கரைந்து போகின்ற மண்ணாங்கட்டிக் கூட்டம் நாங்கள் அல்ல. அடிக்கின்ற தூசி காற்றால் பறக்கின்ற பேப்பர் அல்ல. கொள்கையால் உயர்ந்து நிற்கின்ற இமயத்தின் உயரத்தைக் கொண்ட உறுதிமிக்க தலைவர் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் எங்கள் உயிரினும் மேலான அன்பு தலைவர் தளபதி அவர்கள் இயக்குகின்ற இயக்கம் என்பதால் இந்த இயக்கத்தை தொட்டுப் பார்க்கவும் ஆட்டிப் பார்க்கவும் அசைத்துப் பார்க்கவும் முடியாது என்பதை இந்த போராட்டத்தின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. பேட்டியளித்தார்.